# மெட்ரோ ரயில்களில் தேர்தல் விழிப்புணர்வு பிரசாரம்

**சென்னை, ஏப். 13:** மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப் பதிவை வலியுறுத்தி மெட்ரோ ரயில் நிர்வாகம் விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது.

மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில் மக்களவைத் தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில், மொத்தம் 32 சுவரொட்டிகள், 11 விடியோக்கள் உருவாக்கப்பட்டன. இவை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன சமூக ஊடகப் பக்கத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இதில், வாக்களிப்பதின் முக்கியத்துவம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இதுதவிர, வாக்காளருக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் தொடர்பு கொள்ள '1950' என்ற உதவி எண்ணும் குறிப்பிடப்பட்டுள்ளது. தேர்தல் விழிப்புணர்வு தொடர்பாக மேலும் சில விடியோக்கள் பதிவிறக்கம் செய்து, சமூக ஊடகத்தில் விரைவில் வெளியிடப்படும். இது தவிர, மெட்ரோ ரயில் நிலையங்களில் சுவரொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. சில மெட்ரோ ரயில்களின் பெட்டிகளில் உள்புறத்தில் தேர்தல் விழிப்புணர்வு குறித்த சுவரொட்டி வைக்கப்படவுள்ளது.

இது குறித்து, மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: தேர்தலில் வாக்களிப்பது தொடர்பாக மெட்ரோ ரயில் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாக்குக்குப் பணம் வாங்காமல் வாக்களிக்கவும், 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தியும் நோக்கில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என்றார் அவர்.